# BRAMPTON Service and Information Update

## ஜூலை 16 ஆம் தேதியன்று நகரத்தை மீண்டும் திறப்பதற்கான மாகாண அரசாங்க திட்ட வரைபடத்தின்படி மூன்றாவது அடியினை பாதுகாப்பாக எடுத்துவைக்க ப்ராப்ட்டன் நகரம் தயாராகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 9, 2021) – ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் பொது அறிவிப்பினைத் தொடர்ந்து, ஜூலை 16 ஆம் நாள், வெள்ளிக்கிழமை அதிகாலை 12:01 மணிக்கு நகரத்தை மீண்டும் திறப்பதற்கான மாகாண அரசாங்க திட்ட வரைபடத்தின்படி மூன்றாவது அடியினைப் பாதுகாப்பாக எடுத்து வைக்க ப்ராம்ப்ட்டன் நகரம் தயாராகி வருகிறது. இந்த நடவடிக்கை எடுக்க உதவியமைக்காக நமது சமுதாயத்தினர், மற்றும் ஒன்ட்டேரியோ மாகாண சுகாதாரப் பராமரிப்பில் இருந்து ஒத்துழைப்பு தந்த அனைவருக்கும் நன்றி உரித்தாகட்டும். ஜூலை 8, 2021 நிலவரப்படி, 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 77 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்களுக்கான கோவிட்-19 தடுப்பூசியின் முதலாவது மருந்தளவினைப் செலுத்திக்கொண்டனர் மற்றும் 50சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்களின் இரண்டாவது மருந்தளவினை செலுத்திக்கொண்டனர். மாகாணம் முழுக்கவுமாக 16.6 மில்லியனுக்கும் அதிகமான கோவிட்-19 தடுப்பூசி மருந்தளவுகள் செலுத்தப்பட்டுவிட்டன.

ஜூலை 16 தேதிப்படி, 12:01 மணிக்கு நகரத்தை மீண்டும் திறப்பதற்கான மாகாண அரசாங்க திட்ட வரைபடத்தின் மூன்றாவது அடியை எடுத்து வைக்க, பின்வரும் விதிமுறைகள் மற்றும் மேல்நடவடிக்கைகள் அமலில் இருக்கும்:

- திறந்தவெளி சமூகக் கூட்டங்கள், மற்றும் ஏற்பாடு செய்யப்படும் பொது நிகழ்ச்சிகளில், 100 நபர்களுக்குள்ளாக மட்டுமே இருக்கலாம்
- கட்டிடங்களுக்குள்ளான சமூகக் கூட்டங்கள் மற்றும் ஏற்பாடு செய்யப்படும் பொது நிகழ்ச்சிகளில் 25 நபர்களுக்குள்ளாக மட்டுமே இருக்கலாம்
- கட்டிடங்களுக்குள்ளாக மத சேவைகள், திருமணம் மற்றும் இறுதிக் காரியங்கள் உள்ளிட்ட சடங்குகள் அல்லது சம்பிரதாயங்களில் சமூக இடைவெளி விடும் வகையில் அனுமதிக்கப்படுகிறது.
- கட்டிடங்களுக்கு உள்ளாக சாப்பிடுவதற்கான இடங்களில் கூடும் நபர்களின் என்ணிக்கையில் வரம்பு ஏதுமில்லாமல் மேஜைகளில் சமூக இடைவெளி விடும் வகையில் அமர்ந்து சாப்பிடலாம்; இதர கட்டுப்பாடுகள் அமலில் இருந்துவரும்;
- உள்ளரங்க விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் அவற்றின் 50 சதவீத கொள்திறன் அளவுக்கு எனும் பட்சத்தில் திறக்கலாம். உள்ளரங்க பார்வையாளர்களுக்கான அரங்கில் வழக்கமான கொள்திறனில் 50 சதவீதம் அல்லது 1,000 பேர் இதில் எது குறைவோ அந்த எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் மட்டுமே இருக்கலாம். திறந்தவெளி அரங்குகளில் அதன் கொள்ளளவில் 75 சதவீதம் அல்லது 15,000 பேர் இதில் எது குறைவோ அந்த எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் மட்டுமே இருக்கலாம்;

- உள்ளரங்க கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு உடல் ரீதியான சமூக இடைவெளி விடுதல் மற்றும் பிற கட்டுப்பாடுகளுடன் செயல்பட அனுமதிக்கப்படுகின்றன மற்றும் கொள்திறனில் 50 சதவிகிதம் அல்லது 1,000 பேருக்கு மிகாமல் இருக்க வேண்டும், (இதில் எது குறைவோ அது);
- அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியம் அல்லாத சில்லறை கடைகளில் இரண்டு மீட்டர் உடல்ரீதியான தூரத்தை பராமரிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கையுடன், வரம்பு கொண்ட விற்பனை ;
- முகக் கவசத்தை அகற்ற வேண்டிய தேவை கொண்ட சேவைகள் உள்ளிட்ட தனிநபர் பராமரிப்பு சேவைகள், இரண்டு மீட்டர் தூரத்தை பராமரிக்கக்கூடிய எண்ணிக்கை கொண்ட நபர்களுடன் செயல்படலாம்;
- அருங்காட்சியகங்கள், ஓவியக் காட்சியகங்கள், வரலாற்று தளங்கள், மீன்காட்சி சாலைகள், உயிரியல் பூங்காக்கள், அமைவிடம் காட்டுவதற்கான அடையாள கட்டிடங்கள், தாவரவியல் பூங்காக்கள், அறிவியல் மையங்கள், சூதாட்ட விடுதிகள் / பிங்கோ அரங்குகள், பொழுதுபோக்கு பூங்காக்கள், கண்காட்சிகள் மற்றும் கிராமப்புற கண்காட்சிகள், திருவிழாக்கள் ஆகியவற்றில் திறந்த வெளியில் 75 சதவீத பேர்களுடனும் மற்றும் கட்டிடங்களுக்கு உள்ளாக 50 சதவீதத்திற்கு மிகாமல் பார்வையாளர்களை அனுமதிக்கலாம்.
- இசைக்கச்சேரி அரங்குகள், திரையரங்குகள், நாடக கொட்டகைகள் இவ்வாறு செயல்படலாம்:
  - கட்டிடங்களுக்கு உள்ளாக வழக்கமான கொள்திறனில் 50 சதவீதம் பேர் அல்லது 1,000 பேர் வரையிலான, (இதில் எது குறைவோ அந்த) எண்ணிக்கை கொண்ட நபர்கள் உட்காரலாம்
  - திறந்த வெளிகளில் இருக்கைகள் இல்லாத இடங்களில் 75 சதவீதம் அல்லது 5,000 பேர் (இதில் எது குறைவோ அந்த) எண்ணிக்கை கொண்ட நபர்கள் இருக்கலாம்; நிலைத்த இருக்கைகள் கொண்ட இடங்களில் 75 சதவீதம் பேர் அல்லது அதிகபட்சமாக 15,000 பேர் (இதில் எது குறைவோ அந்த) எண்ணிக்கை கொண்ட நபர்கள் இருக்கலாம்.
- நிலபுலன் வகை திறந்தவெளி அகங்கள் அற்றின் கொள்திறனில் இரண்டு மீட்டர் தூரத்தை பராமரிக்கக்கூடிய எண்ணிக்கை கொண்ட நபர்களுடன் செயல்படலாம்; மற்றும்
- இரவுநேர பார்கள் மற்றும் ரெஸ்ட்டோ பார்கள் உள்ளிட்ட உணவு மற்றும் பானங்கள் பரிமாறும் இடங்களில் அவற்றின் கொள்திறனில் 25 சதவீதம் பேர் அல்லது அதிகபட்சமாக 250 பேர் (இதில் எது குறைவோ அந்த) எண்ணிக்கை கொண்ட நபர்கள் இருக்கலாம்.

இந்த மூன்றாம் படி காலம் முழுவதிலுமாக, கட்டிடங்களுக்கு உள்ளாக முகக் கவசம் அணிதலும் சமூக விலகலைப் பேணுதலும் அமலில் இருந்துவரும். கனடா நாட்டு பொது சுகாதார ஏஜன்ஸியின் தனி நபர் பொது சுகாதார நடவடிக்கைக்கான ஆலோசனைக்கு இசைவாக இது அமலாகிறது. திறந்தவெளிகளிலும் கூட சில இடங்களில் முகக் கவசம் அணிதல் தேவையாகும்.

இந்த திட்ட வரைபடத்தின் மூன்றாம் கட்டத்தில் குறைந்தபட்சம் 21 நாட்களுக்கு மாகாணம் இருந்துவரும்; அதாவது 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தகுதியுள்ள மக்களில் 80 சதவீதம் பேர் கோவிட் -19 தடுப்பூசியின் முதலாவது மருந்தளவினைப் பெற்றிருக்க வேண்டும், 75 சதவீதம் பேர் இரண்டாவது மருந்தளவினப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களில் வேலை செய்பவர்களில் 70 சதவீதம் பேர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்-களையும் செலுத்திக்கொண்டிருந்திருக்க வேண்டும். இதர பொது மக்கள் சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு பற்றி எடுத்துரைக்கும் புள்ளிவிபரங்கள், ஏற்ற இறக்கம் இல்லாமல் நிலையாக இருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இவையனைத்தும் நிறைவேறுகின்றன எனும் பட்சத்தில்,இந்த கட்டிடங்களுக்கு உட்புற மற்றும் திறந்தவெளி அமைப்புகளுக்கான கொள்திறன் வரம்புகள் மற்றும் சமூகக் கூட்டங்களுக்கான வரம்புகள் உள்ளிட்ட பொது சுகாதாரம் மற்றும் பணியிட பாதுகாப்பு நடவடிக்கைகள் நீக்கப்படும். அவ்வப்போதைய நோய்/தொற்று கண்டறிதல், அடையாளகுறிகள் கொண்ட சுவரொட்டிகள் நடுதல் மற்றும் பாதுகாப்புத் திட்டம் தேவைப்படும் வணிகங்கள் உள்ளிட்ட மென்மையான நடவடிக்கைகள் மட்டுமே அமலில் இருக்கும்.

<u>மாகாணத்தின் பத்திரிக்கை செய்திக் குறிப்புகளை இங்கே படிக்கவும்</u>.

**நகரின் சேவைகள் மற்றும் வசதியமைப்புக்கள்**

**பொழுதுபோக்கு மையங்களைத் திறந்துவிடுதல்**

பொழுதுபோக்கு மையம் திறந்துவிடுதல் பற்றிய தகவல்கள் மற்றும் நகரின் பொழுதுபோக்கு மையங்களுக்கு செல்வது பற்றிய ஜூலை 12 வாரத்திய சமீபத்திய தகவல்களுக்கு இங்கு வருகை தரவும். ட்ராப்-இன் உடற்பொருத்தம் பார்த்தல், நீர்விளையாட்டுக்கள், ஸ்கேட்டிங் மற்றும் பொதுவான நிகழ்ச்சிகள் போன்ற அனைத்து பொழுதுபோக்கு மையங்களுக்கும் செல்வதற்கான முன்பதிவு செய்துகொள்ளும் அமைப்பு நடப்பில் இருக்கிறது. .

**நகரின் திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகள்**

நகரத்தை மீண்டும் திறப்பதற்கான மூன்றாம் நிலையின்போது கிடைக்கவிருக்கும் வெளிப்புற பொழுதுபோக்கு வசதிகளில், கோல்ஃப் மைதானங்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி வெளிகள், கால்பந்து மற்றும் பிற விளையாட்டுக் களங்கள், பேஸ்பால் டயமண்டுகள் மற்றும் பேட்டிங் செய்வதற்கானகூண்டுகள், டென்னிஸ் மற்றும் கூடைப்பந்தாட்ட மைதானங்கள், புல்வெளி பந்துவீச்சு மற்றும் போக்கே (bocce), பிஎம்எக்ஸ் (BMX ) மற்றும் ஸ்கேட் பூங்காக்கள் மற்றும் குழந்தைகள் அளைந்து திரிவதற்கான குளங்கள் மற்றும் ஸ்பிளாஷ் பேட்கள் ஆகியவை அடங்கும். புரொஃபெஸ்ஸர்'ஸ் லேக் பீச் மற்றும் எல்டோரடோ பார்க் திறந்தவெளி நீச்சல் குளம் ஆகியவை வானிலை மற்றும் நீர் நிலைமைகள் அனுமதிக்கின்ற பட்சத்தில், திறந்துவிடப்படுகின்றன.

மீண்டும் திறக்கும் கால அட்டவணை மற்றும் குறிப்பிட்ட நகர வசதிகளுக்கான கோவிட்-19 சுகாதார

மற்றும் பாதுகாப்பு வரம்பு அளவுகள் தொடர்பான விபரங்களை அறிய வருகை தரவும்: www.brampton.ca/summerfun.

**மெய்நிகர் வழங்கல்கள்**

மெய்நிகர் முகாம்கள் என்பவை, அதில் பங்கேற்கின்ற 4 முதல் 6 மற்றும் 6 முதல் 10 வயது வரையிலானவர்களுக்கு புதிய நட்பை வளர்ப்பதற்கும், சமூக திறன்களை அதிகரிப்பதற்கும், தங்கள் சகாக்கள் மற்றும் குடும்பத்தினருடன் நிகழ்நேரத்தில் மெய்நிகராகத் தொடர்பு கொள்ளும்போது தங்கள் சொந்த வேகத்தில் உற்சாகமான திட்டங்களில் பங்கு பெறவும் வாய்ப்பளிக்கின்றன. அனைவரையும் உள் சேர்க்கும் மெய்நிகர் முகாம்களில் சேருவதற்கான வாய்ப்புக்கள் 6 முதல் 13 வயது மற்றும் 14 முதல் 20 வயது வரையிலான இரு தரப்பு பங்கேற்பாளர்களுக்கும் கூட கிடைக்கிறது. அனைத்து திட்டங்களும் வெப்எக்ஸ் (WebEx) தளத்தைப் பயன்படுத்தி, பயிற்சி பெற்ற சிட்டி ஆஃப் பிராம்ப்டன் பயிற்றுவிப்பாளர்களால் வழிகாட்டுதல் செய்யப்படும். www.brampton.ca/recathome இல் பதிவு செய்துகொள்ளலாம்.

அவரவர் வீட்டில் இருந்தபடியே, ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் **மெய்நிகர் உடற்பயிற்சி வகுப்புகளில்** கலந்து கொள்ளலாம், அவை தீவிரத்தன்மை கொண்டபடியும் ஒவ்வொருவர் விருப்பத்திற்கேற்றபடியான பலவிதமான பயிற்சி வகைகளைக் கொண்டும் உள்ளன. தேர்ச்சி பெற்ற உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளர்களுடன் இலவசமாக 30 நிமிட நேரடி உடற்பயிற்சிகளுக்காக பதிவு செய்து கொள்ளுங்கள். இதற்காக www.brampton.ca/recathome இல் 7 நாட்களுக்கு முன்பே பதிவுசெய்துகொள்ளவும்.

55+ வயதுடைய பெரியவர்கள் இலவச, பரஸ்பர செயல்பாடு கொண்ட **ஆன்லைன் பட்டறைகளுக்கு** பதிவு செய்ய வரவேற்கப்படுகிறார்கள். பங்கேற்பாளர்கள் தமது வயது கொண்ட சகாக்களைச் சந்திக்கவும், பழகவும், புதிய நட்பை உருவாக்கவும், ஆன்லைனில் பாதுகாப்பான மற்றும் கட்டமைக்கப்பட்ட சூழலில் இணையவும் வாய்ப்பு பெறுவார்கள். வெப்எக்ஸ் (WebEx ) தளத்தைப் பயன்படுத்தி பயிற்சி பெற்ற ப்ராம்ப்ட்டன் நகர பயிற்றுவிப்பாளர்களால் செயல்பாடுகள் வழிநடத்தப்படும். இதற்காக www.brampton.ca/recathome இல் பதிவுசெய்துகொள்ளவும் .

**தடுப்பூசிகள்**

பீல் நகரில் வசிக்கின்ற, பணிபுரிகின்ற, அல்லது 12 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய எவரும் தங்கள் முதல் டோஸ்க்கான முன்பதிவு செய்துகொள்ளலாம்.

mRNA தடுப்பூசி (ஃபைசர் அல்லது மாடர்னா) பெற்ற எவரும் தங்களது இரண்டாவது டோஸ்-ஐ பதிவு செய்து கொள்ள தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். முதல் மற்றும் இரண்டாவது டோஸ்-க்கு இடையிலான காலம் குறைந்தது 28 நாட்கள் இருக்க வேண்டும்.

குறைந்தது எட்டு வாரங்களுக்கு முன்பு அஸ்ட்ராஜெனெகாவின் முதல் டோஸைப் பெற்ற எவரும் தங்கள் இரண்டாவது டோஸ்-க்காக முன்பதிவு செய்துகொள்ளலாம். மக்கள் தங்கள் இரண்டாவது டோஸுக்கு mRNA தடுப்பூசியை (மாடர்னா அல்லது ஃபைசர்) செலுத்திக்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.

COVID-19 தடுப்பூசிகள் குறித்த மிக சமீபத்திய தகவல்களுக்கு, மாகாணத்தின் தடுப்பூசி போர்ட்டலை தடுப்பூசி போர்ட்டலைப் பார்வையிடவும்.

**லின்குகள்**

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 நிகழ்ச்சி நிரல் அமைத்தல் மற்றும் சேவை பற்றியபுது தகவல்கள் (City of Brampton COVID-19 programming and service updates)
- ப்ராம்ப்ட்டன் நகரம் – என்னவெல்லாம் திறந்திருக்கிறது, என்னவெல்லாம் மூடியிருக்கிறது ( City of Brampton – what's open, what's closed)
- கோவிட் -19 அறிகுறிகள் (COVID-19 symptoms)
- கோவிட்-19 தடுப்பூசி (COVID-19 vaccine_
- ப்ராம்ப்ட்டன் நகரில் சோதனை செய்துகொள்ளுதல் (Testing in Brampton)
- சுயமாக தனிமைப்படுத்திக் கொள்வது எப்படி (How to self-isolate)
- கோவிட்-19 இன் போது வணிக இடங்கள் பற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)

- பீல் பிராந்தியத்தில் கோவிட்-19 (Cases of COVID-19 in Peel)

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்தி ரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca